தினமணி

**இன்றைய வேளாண் செய்திகள்**

19.09.2013

**விலையேற்ற வாய்ப்பு குறைவு: அறுவடையான சூரியகாந்தியை உடனே விற்கலாம்**



புரட்டாசி, ஐப்பசி மாதங்களில் விலையேற்ற வாய்ப்பு குறைவாக இருப்பதால் அறுவடையான சூரியகாந்தியை உடனே விற்கலாம் என தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம் தெரிவித்துள்ளது.

இதுதொடர்பாக, உள்நாட்டு மற்றும் ஏற்றுமதி சந்தைத் தகவல் மையம் வெளியிட்ட அறிவிப்பு: சூரியகாந்தி, இந்தியாவின் மிக முக்கியமான எண்ணெய் வித்துப் பயிர் ஆகும். இது சாகுபடிப் பரப்பு மற்றும் உற்பத்தி அடிப்படையில் எண்ணெய் வித்துப் பயிர்களின் மத்தியில் நான்காவது இடத்தைப் பெற்றுள்ளது.

இந்தியாவில் 2012-13ல் சூரியகாந்தி உற்பத்தி 6.15 லட்சம் டன்களாக இருந்தது. இது 2011-2012ல் 6.20 லட்சம் டன்களாகும்.

தமிழகத்தில் 2010-11ல் 8,718 ஹெக்டேர் பரப்பளவிலிருந்து 10,039 டன்கள் சூரியகாந்தி விதை உற்பத்தி செய்யப்பட்டது. கரூர், தூத்துக்குடி, திருச்சி, தருமபுரி, விருதுநகர் ஆகிய மாவட்டங்களின் பங்களிப்பு தமிழ்நாட்டில் சாகுபடியாகும்

சூரியகாந்தியின் நிலப்பரப்பில் 67.81 சதவீதமும், உற்பத்தியில் 60.55 சதவீதமும் ஆகும்.

கார்த்திகை (அக்டோபர் முதல் நவம்பர் வரை), சித்திரைப் பட்டங்களில் (ஏப்ரல் முதல் மே வரை) சூரியகாந்தி பயிரிடப்படுகிறது.

தமிழகத்தில் தற்போது சித்திரைப் பட்டத்தில் (ஏப்ரல் -மே) விளைவித்த சூரியகாந்தி சந்தைக்கு வரத் தொடங்கியுள்ளது. வெள்ளக்கோவில், மூலனூர், கொடுமுடி ஆகியவை முக்கிய சூரியகாந்தி சந்தை மையங்களாகும்.

தமிழகத்தில் சன்பிரட், கங்கா காவேரி ஆகிய வீரிய இனங்கள் பெருமளவில் பயிரிடப்படுகின்றன.

இறவை சாகுபடியில் சராசரியாக ஏக்கருக்கு 1000 முதல் 1200 கிலோ வரை சூரியகாந்தி விதை மகசூல் எடுக்கலாம். ஆனால் தரமற்ற விதை, பூச்சித்தாக்குதல், மின்சாரம் பற்றாக்குறை, குறைந்த மழை, வேலையாள்கள் தட்டுப்பாடு ஆகிய காரணங்களால் இந்தப் பருவத்தில் சூரியகாந்தி மகசூல் ஒரு ஏக்கருக்கு 500 முதல் 600 கிலோ வரை மட்டுமே கிடைத்துள்ளது.

சூரியகாந்தி சாகுபடிப் பரப்பு, மகசூல் இரண்டுமே குறைந்துள்ளதால் சந்தைக்கு வரும் விதைகளின் அளவும் குறைந்துள்ளது.

விவசாயிகள் இப் பட்டத்தில் அறுவடை செய்யப்படும் சூரியகாந்தி விதையை விற்பது தொடர்பான முடிவுகளை எடுப்பதற்கு ஏதுவாக தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தில் உள்ள வேளாண்மை மற்றும் ஊரக மேம்பாட்டு ஆய்வு மையத்தில் இயங்கி வரும் உள்நாட்டு மற்றும் ஏற்றுமதி சந்தைத் தகவல் மையம், வெள்ளக்கோவில் ஒழுங்குமுறை விற்பனைக் கூடத்தில் கடந்த 13 வருடங்களாக நிலவிய விலையை ஆராய்ந்தது.

ஆய்வு முடிவுகளின்படி, சூரியகாந்தி விதையின் பண்ணை விலை புரட்டாசி, ஐப்பசி மாதங்களில் கிலோ ஒன்றுக்கு சராசரியாக ரூ.38 ஆக இருக்கும். விலையேற்றத்திற்கான வாய்ப்புகள் குறைவாக உள்ளதால் அறுவடையான சூரியகாந்தியை உடனே விற்குமாறு சிபாரிசு செய்யப்படுகிறது.

மேலும் விவரங்களுக்கு உள்நாட்டு மற்றும் ஏற்றுமதி சந்தைத் தகவல் மையம், வேளாண் மற்றும் ஊரக மேம்பாட்டு ஆய்வு மையம், தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம், கோவை - 641003. தொலைபேசி 0422-2431405.

தொழில்நுட்ப விவரங்களுக்கு, பேராசிரியர் மற்றும் தலைவர், எண்ணெய் வித்துகள் துறை, தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம், கோவை - 641 003.

தொலைபேசி- 0422-2450812.

**வளம் தரும் சப்போட்டா சாகுபடி**



சப்போட்டா சாகுபடியில் உயரிய தொழில்நுட்பங்களைப் பின்பற்றினால் கூடுதல் மகசூலும், அதிக லாபமும் ஈட்டலாம் என திருநெல்வேலி மாவட்ட தோட்டக்கலைத்துறை தெரிவித்துள்ளது.

இது குறித்து திருநெல்வேலி மாவட்டம் சேரன்மகாதேவி தோட்டக்கலைத் துறை உதவி இயக்குநர் தி.சு. பாலசுப்பிரமணியன் வெளியிட்ட செய்திக் குறிப்பு:

சிறப்புகள்: சப்போட்டா பழத்தில் பரக்டோஸ், சுக்ரோஸ் ஆகிய எளிய சர்க்கரைகள் உள்ளதால் சாப்பிட்டவுடன் உடனடி ஆற்றலும், புத்துணர்ச்சியும் பெறலாம். 5.6 சதவீத நார்ச்சத்து உள்ளது. மலச்சிக்கலைத் தடுக்கும். சப்போட்டாவில் உள்ள டானின் எனும் வேதிப் பொருள் நோய் எதிர்ப்பு சக்தியை வழங்கி உள் புண்களை ஆற்ற வல்லது. பொட்டாசியம், தாமிரம், இரும்பு ஆகிய தாது உப்புக்களையும், வைட்டமின் சி, ஏ, பி வகைகளும் சப்போட்டாவில் உள்ளன.

ரகங்கள்: கோ1, 2, 3 மற்றும் பிகேஎம் 1, 2, 3, 4, 5, ஓவல், கிரிக்கெட் பால், கீர்த்திபர்த்தி, காளிப்பட்டி.

மண் மற்றும் தட்பவெப்பம்: அனைத்து வகை மண்களிலும் வளரக் கூடியது. வண்டல் மண் மிகவும் ஏற்றது. கடல் மட்டத்திலிருந்து ஆயிரம் அடி உயரம் வரை வளரக் கூடியது. உப்புத் தன்மை கொண்ட நீரையும் தாங்கி வளரக் கூடியது. ஜூன் முதல் டிசம்பர் வரை நடுவதற்கு ஏற்ற தருணம்.

நடவு: வரிசைக்கு வரிசை 8 மீ, செடிக்குச் செடி 8 மீ இடைவெளியில் நடவு செய்யலாம். அடர் நடவில் வரிசைக்கு வரிசை 8 மீ., செடிக்குச் செடி 4 மீ இடைவெளியில் நடவு செய்யலாம். 3 க்கு 3 அடி என்ற அளவில் எடுக்கப்பட்ட குழிகளில் 10 கிலோ தொழுஉரம், ஒரு கிலோ வேப்பம் புண்ணாக்கு, 1.3 சத லிண்டேன் குருணை 100 கிராம் ஆகியவற்றை மேல் மண்ணுடன் கலந்து இட்டு, ஒட்டு சப்போட்டா கன்றுகளை குழியின் நடுவில் ஒட்டுப்பகுதி தரைமட்டத்திலிருந்து அரை அடி உயரத்தில் இருக்குமாறு நடவு செய்ய வேண்டும். ஆதரவுக்குக் குச்சி நட்டு தளர்வாகக் கட்டி விட வேண்டும்.

நீர்ப் பாசனம்: நட்டவுடனும், நட்ட மூன்றாம் நாளும் உயிர்த் தண்ணீர் விட வேண்டும். பின்னர் ஒருவாரம் அல்லது 10 நாள் இடைவெளியில் தேவைக்கேற்ப தண்ணீர் பாய்ச்சலாம்.

ஊடுபயிர் சாகுபடி: முதல் மூன்றாண்டுகளுக்கு காய்ப்புக்கு முன்னதாக பயறு வகைகள், நிலக்கடலை, குறுகிய கால காய்கறிகள் சாகுபடி செய்து கூடுதல் லாபம் பெறலாம்.

பயிர் பாதுகாப்பு: இலை பிணைக்கும் புழுவைக் கட்டுப்படுத்த ஒரு லிட்டர் தண்ணீரில் இரண்டு மில்லி பாசலோன் 35 ஈசி மருந்தைக் கலந்து தெளிக்க வேண்டும்.

கம்பளிப் புழுவைக் கட்டுப்படுத்த ஒருலிட்டர் தண்ணீரில் இரண்டு மில்லி குளோர்பைரிபாஸ் 20 ஈசி மருந்து கலந்து தெளிக்கலாம்.

இலைக் கரும்பூசண நோய்: மைதா மாவுக் கரைசலைத் தெளிப்பதன் மூலம் இந்த நோயைக் கட்டுப்படுத்தலாம். 5 லிட்டர் தண்ணீரில் ஒரு கிலோ மைதா கலந்து

கொதிக்க வைத்து கூழ்போல காய்ச்ச வேண்டும். பின்னர் ஆற வைத்து 20 லிட்டர் தண்ணீரில் கலந்து தெளிக்க வேண்டும். இந்த பசையானது இலைகளில் ஒட்டிக் கொண்டு காய்ந்து உதிரும்போது பூசணமும் சேர்ந்து உதிர்ந்துவிடும்.

அறுவடை: முதிர்ச்சியடைந்த காய்கள் மேல்புறத்தில் மங்கிய பழுப்பு நிறத்திலும், சுரண்டிப் பார்த்தால் தோலுக்குக் கீழுள்ள பகுதி நிழலான மஞ்சள் நிறத்திலும் இருக்கும். முதிர்ச்சியடையாத காய்களில் பச்சை நிறமாக இருக்கும். இதனைக் கண்டுபிடித்து முதிர்ந்த பழங்களை அறுவடை செய்யலாம்.

ஒருங்கிணைந்த தோட்டக்கலை அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் அனைத்து வட்டாரத் தோட்டக்கலை உதவி இயக்குநர் அலுவலகங்களிலும் 50 சத மானியத்தில் சப்போட்டா கன்றுகள் வழங்கப்படுகின்றன. மேலும், விவரங்களுக்கு தோட்டக்கலைத் துறை அலுவலகங்களைத் தொடர்பு கொள்ளலாம் என உதவி இயக்குநர் (சேரன்மகாதேவி) தி.சு. பாலசுப்பிரமணியன் தெரிவித்தார்.

**பூச்சிகளை கட்டுப்படுத்தும் இயற்கையின் கொடை வேம்பு!**



இயற்கை வழியில் பூச்சிகளைக் கட்டுப்படுத்துவதில் இயற்கையின் கொடையான வேம்பின் பயன்பாடு குறித்து நெல் ஆராய்ச்சி மையம் விளக்கம் அளித்துள்ளது.

திருநெல்வேலி மாவட்டம் அம்பாசமுத்திரம் நெல் ஆராய்ச்சி மைய பூச்சியியல்துறை உதவி பேராசிரியர் கு. இளஞ்செழியன் வெளியிட்ட செய்திக் குறிப்பு:

விவசாயிகள் பூச்சிகளைக் கட்டுப்படுத்த பெரும்பாலும் பூச்சிக் கொல்லி மருந்துகளையே அதிகம் பயன்படுத்துகின்றனர். பூச்சிக் கொல்லி மருந்துகளை அளவுக்கு அதிகமாகப் பயன்படுத்துவதால் நன்மை செய்யும் பூச்சிகளான தட்டான்,

ஊசித் தட்டான், பொறி வண்டு, தரை வண்டு, சிலந்திகள், குளவிகள், தேனீக்கள் போன்றவை பாதிக்கப்படுவதோடு மட்டுமல்லாமல், சுற்றுச் சூல்நிலைகளையும் பாதிக்கிறது.

பூச்சிக் கொல்லி மருந்துகளை திரும்பத் திரும்ப தெளிப்பதனால் பூச்சிகளானது பூச்சிக் கொல்லி மருந்துகளுக்கு எதிர்ப்புத் தன்மையை உருவாக்கி கொள்கின்றன.

இது மட்டுமல்லாமல், நாம் உண்ணும் உணவு தானியங்களிலும் காய்கறிகள் மற்றும் பழங்களிலும் எஞ்சிய நஞ்சானது தேங்கி விடுகிறது. இதனால் மனிதர்களுக்கும், அவர்களைச் சார்ந்த விலங்கினங்களும், பறவைகளும் பல்வேறு வகையான நோய்களுக்கு ஆளாக நேரிடுகிறது. எனவே விஞ்ஞானிகளும், ஆராய்ச்சியாளர்களும் இயற்கை முறையில் பூச்சிகளைக் கட்டுப்படுத்துவதில் அதிக ஆர்வம் கொண்டு ஆராய்ச்சி செய்து வருகின்றனர்.

உலகில் மிக அதிகமாக ஆராய்ச்சி செய்யப்பட்ட மரங்களில் வேம்பு முதன்மையானது. இதன் பாகங்களான இலை, பூ, விதை, பட்டை போன்றவை பூச்சிகளைக் கட்டுப்படுத்துவதில் பங்கு வகித்தாலும் வேப்பங்கொட்டையானது ஒருங்கிணைந்த பூச்சி நிர்வாகத்தில் முக்கிய பங்கு வகிக்கிறது. வேம்பு 350 வகையான பூச்சிகளையும், 15 வகையான பூஞ்சாணங்களையும், 12 வகையான நூற்புழுக்களையும், 2 வைரஸ் கிருமிகள் மற்றும் 2 வகையான நத்தைகளையும் கட்டுப்படுத்துவதாக கண்டறியப்பட்டுள்ளது.

வேப்ப மரத்தின் அனைத்து பாகங்களும் மக்களுக்கு பயன்படுவதால் இதை மக்கள் சர்வலோக நிவாரணி, இயற்கை கொடை, அதிசய மரம் மற்றும் கிராம மருந்தகம் என அழைக்கின்றனர். வேம்பின் கசப்புத் தன்மைக்கு காரணம் அசாடிராக்டின் எனக் கண்டறியப்பட்டுள்ளது. அசாடிராக்டின் சுமார் 550 வகையான பூச்சிகளைக் கட்டுப்படுத்துகிறது. இவை பூச்சிகள் பயிர்களை உண்பதைத் தடுப்பதோடு மட்டுமல்லாமல் பூச்சிகள் முட்டையிடுவதையும், முட்டையில் இருந்து இளம் பூச்சிகள் வெளியே வருவதையும் தடுக்கின்றன. பூச்சிகளின் வளர்ச்சியையும் பாதிக்கிறது.

இவை அந்துப் பூச்சிகள், வண்ணத்துப் பூச்சிகள், வண்டுகள், கூன் வண்டுகள், ஈக்கள், எறும்புகள், குளவிகள் நாவாய்

பூச்சிகள், வெட்டுக் கிளிகள், கரப்பான் பூச்சிகள் மற்றும் கரையான்கள் போன்ற பூச்சிகளின் வளர்ச்சி மாற்றத்தைப் பாதிக்கின்றன. மேலும் மனிதர்கள் மற்றும் விலங்குகளுக்கு நோய்களைப் பரப்பக்கூடிய ஈக்கள், உண்ணிகள், பேன்கள் மற்றும் சிலந்திகளைக் கட்டுப்படுத்துவதில் அசாடிராக்டின் பயன்படுத்தப்படுகிறது.

விவசாயப் பயிர்கள்: நெற்பயிரில் வேப்பெண்ணெய் 1 சதம் (10 மிலி-லிட்டர்) அல்லது வேப்பங் கொட்டைச் சாறு 5 சத கரைசலை தெளிக்கும்போது இலைச் சுருட்டுப் புழுவின் தாக்குதல் குறைகிறது. வேப்பங் கொட்டைச்சாறு 5 சத கரைசலைத் தெளிப்பதால் புகையானின் வளர்ச்சி பருவமானது பாதிக்கப்படுகிறது. மேலும் அதன் உருவம் மற்றும் எடையிலும் மாற்றம் ஏற்படுகிறது. வேப்பெண்ணெய் (3 சதம்) நெற்பயிரை கதிர் நாவாய்ப் பூச்சிகள் தாக்குதல் இருந்து பாதுகாக்கிறது.

கொண்டைக் கடலையில் வேப்பங்கொட்டைச்சாறு அல்லது வேப்பெண்ணெய் (5 சதம்) தெளிப்பதால் காய்த் துளைப்பானின் தாக்குதல் வெகுவாகக் குறைகிறது. அசாடிராக்டின் கலந்த மருந்தை தெளிக்கும்போது காய்த்துளைப்பானின் தாக்குதலாவது 90 சதவீதம் வரை குறைவதாகக் கண்டறியப்பட்டுள்ளது. வேப்பங்கொட்டைச்சாறு துவரையில் காய்த் துளைப்பான்களையும், தட்டைப் பயிரில் அசுவினியின் தாக்குதலையும் குறைக்கிறது.

நிலக்கடலையில் இலைத் துளைப்பானைக் கட்டுப்படுத்துவதில் வேம்பு சார்ந்த மருந்துகள் முக்கிய பங்கு வகிக்கின்றன. வேப்பெண்ணெய் மற்றும் வேப்பங்கொட்டைச்சாறு தெளிக்கப்பட்ட இலைகளை தொடர்ந்து உண்பதால் நிலக்கடலையில் சிவப்பு கம்பளி புழுவானது குறைந்து விடுவதாக ஆராய்ச்சியில் தெரிவிக்கின்றன.

நன்மைகள்: வேம்பு மற்றும் வேம்பு சார்ந்த பொருட்களால் சுற்றுப்புறச் சூழ்நிலைக்கு எந்தவித பாதிப்பும் இல்லை. வேம்பானது பூச்சிகளை கொல்வதில்லை. மாறாக பூச்சிகளின் வளர்ச்சி பருவத்தைப் பாதிக்கின்றன. இவை நன்மை செய்யும் பூச்சிகள், விலங்குகள், பறவைகள், மீன்கள் மற்றும் தேனீக்களை எதுவும் செய்வதில்லை. வேம்பு சார்ந்த பொருள்களுக்கு பூச்சிகள் எதிர்ப்புத் தன்மையை உருவாக்கிக் கொல்வதில்லை. இதனை செயற்கையாகத் தயாரிக்கப்படும் மருந்துகளுடன் கலந்தும் தெளிக்கலாம்.

வேம்பானது எளிதில் கிடைக்கக் கூடியது மற்றும் வேம்பு சார்ந்த மருந்துகளின் விலையும் மிகவும் குறைவு.

எனவே ஒருங்கிணைந்த பூச்சி நிர்வாகத்தில் வேம்பு மற்றும் அதனைச் சார்ந்த மருந்துகளைப் பயன்படுத்தி இயற்கைக்கு எவ்வித சேதாரமும் இல்லாமல், நன்மை செய்யும் பூச்சிகளையும் பாதிக்காமல் இயற்கையுடன் ஒருங்கிணைந்து பூச்சிகளை கட்டுப்படுத்தி அதிக லாபம் ஈட்டலாம் என்றார் அவர்.

**ஒரு சில இடங்களில் மழை வாய்ப்பு**

தமிழகம் மற்றும் புதுச்சேரியின் ஒரு சில இடங்களில் வியாழக்கிழமை (செப். 19) மழை பெய்ய வாய்ப்புள்ளதாக சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

சென்னை மற்றும் புறநகர்ப் பகுதிகளில் மழையோ அல்லது இடியுடன் கூடிய மழையோ பெய்ய வாய்ப்புள்ளதாக அறிவிப்பு வெளியாகியுள்ளது.

செவ்வாய்க்கிழமை காலை 8.30 மணி வரை பதிவாகியுள்ள மழை விவரம் (மில்லி மீட்டரில்)

வால்பாறை, தேவலா (நீலகிரி மாவட்டம்)- 70, தஞ்சாவூர், மதுராந்தகம் -60, பெரியாறு, திருச்சி -50, மன்னார்குடி, அறந்தாங்கி, திருவாரூர்-40, கோத்தகிரி, கந்தர்வக்கோட்டை, நீடாமங்கலம்-30, காரைக்கால், பட்டுக்கோட்டை, விராலிமலை- 20, ஆரணி, பொள்ளாச்சி- 10.

**ஒரு சில இடங்களில் மழை வாய்ப்பு**

தமிழகம் மற்றும் புதுச்சேரியின் ஒரு சில இடங்களில் இன்று மழை பெய்ய வாய்ப்புள்ளதாக சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

சென்னை மற்றும் புறநகர்ப் பகுதிகளில் மழையோ அல்லது இடியுடன் கூடிய மழையோ பெய்ய வாய்ப்புள்ளதாக அறிவிப்பு வெளியாகியுள்ளது.

**உணவு தானிய இருப்பை அதிகரிக்க 20-இல் மத்திய அரசு ஆலோசனை**

உணவு தானியங்கள், எண்ணெய் வித்துகளின் தேவையைச் சமாளிக்கவும், சந்தை விலையைக் கட்டுப்படுத்தவும் அவற்றின் இருப்பை ஓர் ஆண்டுக்கு அதிகரிக்க வரும் செப்டம்பர் 20 ஆம் தேதி நடைபெறும் அமைச்சரவைக் கூட்டத்தில் விவாதிக்கப்படும் எனத் தெரிகிறது.

அத்தியாவசிய உணவுப் பொருள்கள் சட்டம் 1955இன்படி, வெளிச்சந்தையில் அத்தியாவசியப் பொருள்களின் விலை அதிகரிப்பு மற்றும் பதுக்கல்களைத் தடுக்க, சேமிப்புக் கிடங்கில் உள்ள இருப்பைப் பொறுத்து மாநில அரசுகளுக்கு மத்திய அரசு உணவு தானியங்களை பிரித்து வழங்கி வருகிறது. அதன் அடிப்படையில் விலை நிர்ணயிக்கப்படுகிறது. தானியங்கள், எண்ணெய் வித்துகள் ஆகியவற்றின் உற்பத்தி உள்நாட்டில் குறைந்துள்ள நிலையில், வெளிநாடுகளில் இருந்து அவை இப்போது இறக்குமதி செய்யப்பட்டு வருகின்றன. வரும் காரிஃப் பருவத்தில் தானியங்கள் மற்றும் எண்ணெய் வித்துகளின் உற்பத்தி உள்நாட்டில் அதிகரிக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

இதனிடையே, தானியங்கள், எண்ணெய் வித்துகளின் இருப்பு அளவு இம்மாதம் 30ஆம் தேதியுடன் முடிவடைய உள்ளது. உணவுப் பாதுகாப்புத் திட்டத்திற்கு தானியங்கள் தேவைப்படுவதால், அவற்றின் இருப்பை அதிகரிக்க மத்திய அரசு முடிவு செய்துள்ளது.

இந்நிலையில், உணவு மற்றும் நுகர்வோர் அமைச்சகத்தின் கூட்டம் வரும் 20ஆம் தேதி நடைபெற உள்ளது. அப்போது, உணவு தானியங்கள், எண்ணெய் வித்துக்கள் இருப்பின் அளவை மேலும் ஓராண்டுக்கு அதாவது, 2014ஆம் ஆண்டு வரை செப்டம்பர் 30 வரை அதிகரிப்பது குறித்துப் பரிசீலிக்கப்படும் எனத் தெரிகிறது.

**வெங்காய விலை உயர்வை கட்டுப்படுத்துங்கள்**



வெங்காய விலை உயர்வைக் கட்டுக்குள் வைக்க மாநில அரசுகள் நடவடிக்கை எடுக்க வேண்டும் என மத்திய அரசு அறிவுறுத்தியுள்ளது.

செப்டம்பர் மாதத்தில் வழக்கமாக ஏற்படும் பற்றாக்குறையை சாதகமாக்கி விலை உயர்வுக்கு காரணமாக இருக்கும் வர்த்தகர்கள், ஊக வணிக பேரத்தில் ஈடுபடுபவர்கள் மீது மாநில அரசுகள் நடவடிக்கை எடுக்க வேண்டும் என மத்திய நுகர்வோர் நலத் துறை அமைச்சக மூத்த அதிகாரி வலியுறுத்தினார்.

அந்த அதிகாரி மேலும் கூறியதாவது: கடந்த ஜூலை முதல் நாடு முழுவதும் வெங்காயத்தின் மொத்த விற்பனை மற்றும் சில்லறை விற்பனை விலை கடுமையாக அதிகரித்து வந்துள்ளது. தலைநகர் தில்லியில் ஒரு கிலோ வெங்காயம் ரூ.80-க்கு விற்கப்படுகிறது.

2013-ல் நுகர்வுக்காக 27.5 லட்சம் டன் வெங்காயம் கிட்டங்கிகளில் சேமித்து வைக்கப்பட்டுள்ளது. இதில் 15.5 லட்சம் டன் மகாராஷ்டிரத்திலும், தலா 1 டன் முதல் 2 டன் வெங்காயம் குஜராத், பிகார், கர்நாடகம், மகாராஷ்டிரம், உத்தரப் பிரதேசம், ராஜஸ்தான், தமிழ்நாடு ஆகிய மாநிலங்களிலும் சேமித்து வைக்கப்பட்டுள்ளது.

இதில் 90 சதவீத வெங்காயம் விற்றுவிட்டது. இப்போது 3 லட்சம் டன் முதல் 4 லட்சம் டன் வெங்காயம்தான் கைவசம் உள்ளது. வெங்காய விநியோகம் தொடர்ந்து இருக்க நடவடிக்கை எடுக்குமாறும், விநியோகத்தில் ஏதேனும் குளறுபடி உள்ளதா என்பதை மத்திய அரசுக்குத் தெரிவிக்குமாறும் மகாராஷ்டிரத்துக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

சேமித்து வைக்கப்பட்ட வெங்காயம், வரத்து குறைவாக இருக்கும் ஜூன்- ஆகஸ்ட் மாதங்களில் பயன்படுத்தப்படும். மழை காரணமாக கர்நாடகம், ஆந்திரப் பிரதேசத்தில் வெங்காய உற்பத்தி பாதிக்கப்பட்டுள்ளது. அதன் காரணமாக வரத்து குறைந்ததால் விலை கடுமையாக அதிகரித்துள்ளது.

சாதாரணமாக வெங்காயத்தின் விலை ஒவ்வோர் ஆண்டும் செப்டம்பர்- நவம்பர் மாதங்களில் அதிகமாகவும், ஜனவரி- மார்ச் மாதங்களில் குறைவாகவும் இருக்கும். வழக்கமாக ஆகஸ்ட்- செப்டம்பர் மாதங்களில் கையிருப்பு தீர்ந்துவிடும்.

தமிழ்நாடு, கர்நாடகம், ஆந்திரத்தில் அறுவடை தொடங்கியுள்ளது. எனவே, வரத்து அதிகரித்தவுடன் வெங்காயத்தின் விலை குறையும் என்றார்.

வெங்காய விலை உயர்வைக் கட்டுப்படுத்த இறக்குமதி செய்ததுடன் ஏற்றுமதிக்கும் மத்திய அரசு கட்டுப்பாடு விதித்தது குறிப்பிடத்தக்கது.

தினமலர்

**இன்றைய வேளாண் செய்திகள்**

**19.09.2013**

## உலகின் நெற்களஞ்சியமாக இந்தியா மாறும் தஞ்சையில் மத்திய இணையமைச்சர் உறுதி

தஞ்சாவூர்: ""இன்னும் 20 ஆண்டில், விவசாயத்துறையில் வேகமாக முன்னேறி, உலகத்துக்கே உணவு வழங்கும் நெற்களஞ்சியமாக இந்தியா மாறும்," என, மத்திய வர்த்தக தொழில்துறை இணையமைச்சர் சுதர்சன நாச்சியப்பன் பேசினார்.

தஞ்சையில் இந்தியன் பயிர் குளிர்பதன தொழில்நுட்பக்கழக நிறுவன வளாகத்தில், விவசாயம் மற்றும் விவசாயம் சார்ந்த தொழிற்துறையில் மதிப்பு கூட்டுதல் குறித்த கருத்தரங்கம் நேற்று நடந்தது. மத்திய வர்த்தக தொழிற்துறை இணையமைச்சர் சுதர்சன நாச்சியப்பன் தலைமை வகித்து பேசியதாவது:

தமிழகத்தின் நெற்களஞ்சியம் என, தஞ்சை போற்றப்படும் அளவுக்கு, விவசாய தொழிலில் சிறந்து விளங்குகிறது. வரலாற்றிலும் முக்கிய இடத்தை பிடித்துள்ளது. உணவு பாதுகாப்பு சட்டத்தை, மத்திய அரசு கடும் சிரமங்களுக்கு இடையில், மக்கள் நலனுக்காக, குறிப்பாக விவசாயிகள் நலனுக்காக அமல்படுத்தியுள்ளது. ஆனால், இதை புரிந்து கொள்ளாமல் பலரும் உணவு பாதுகாப்பு சட்டத்தை எதிர்க்கின்றனர்.

உணவு பாதுகாப்பு சட்டம் விவசாயிகளுக்கு மிகவும் பயனளிக்க கூடியது. விவசாய வளர்ச்சிக்கு மிகப்பெரிய தொகை செலவிடுவதையும், விவசாயத்துறை முன்னேற்றம் அடைவதையும் சிலர் ஏற்க மறுக்கின்றனர்.

உணவு பாதுகாப்பு சட்டத்தின் மூலம் நெல்லுக்கு குறைந்தபட்ச அடிப்படை ஆதார விலைக்கு உத்தரவாதம் அளிக்கப்படும். விவசாயத்துக்கு நேரடியாக, ஒரு லட்சம் கோடி ரூபாய் நிதி சென்று சேரும். தற்போது கூட்டுறவு வங்கியில் விவசாய கடன்களை விவசாயிகள் பெற்று சிரமத்துக்கு ஆளாகும் நிலை மாறும்.

இந்தியா விவசாய நாடு. உலக வரைபடத்தில் இதயம் போல இந்தியா உள்ளது. இன்னும், 20 ஆண்டு கழித்து, இதயத்தில் இருந்து உடலின் பிற பாகங்களுக்கு ரத்தம் செல்வது போல, உலகத்துக்கே உணவு அளிக்கும் நெற்களஞ்சியமாக, இந்தியா உயரும். இஸ்ரேல் போன்ற நாடுகளில் மழை வளம் குறைவாக இருந்தாலும், தொழில்நுட்பங்களை பயன்படுத்தி, விவசாய உற்பத்தியை அதிகரிக்கின்றனர். இவ்வாறு அவர் பேசினார்.

## வடகிழக்கு பருவமழை முன்னேற்பாடு தஞ்சையில் கலெக்டர் ஆலோசனை

தஞ்சாவூர்: வடகிழக்கு பருவமழையால் பொதுமக்களுக்கு ஏற்படும் பாதிப்புகளை தடுக்கும் வகையில், முன்னேற்பாடு நடவடிக்கை எடுப்பது குறித்து, தஞ்சை கலெக்டர் பாஸ்கரன், அதிகாரிகளுடன் ஆலோசனை நடத்தினர்.

தஞ்சை கலெக்டர் அலுவலகத்தில் வடகிழக்கு பருவமழை முன்னேற்பாடு குறித்த ஆலோசனை கூட்டம் நடந்தது. இதில் கலெக்டர் பாஸ்கரன் தலைமை வகித்து பேசியதாவது:

தஞ்சை மாவட்டத்தில் வடகிழக்கு பருவமழை முன்னேற்பாடு பணிகள் தொடர்பாக பேரிடர் மேலாண்மை திட்டம் செயல்படுத்தப்படுகிறது. இதுகுறித்து திட்ட கையேடு தயாரித்து, அனைத்துத்துறை அலுவலர்களுக்கும் வழங்கப்பட்டுள்ளது. அக்., மாதம் முதல், டிச., மாதம் வரை, மூன்று மாதம் வடகிழக்கு பருவமழை பெய்யும் என, எதிர்பார்க்கப்படுகிறது. இதனால் ஏற்படும் பாதிப்புகளை கூறும் வகையில், 1,077 எனும் இலவச டெலிஃபோன் எண்ணுடன், கட்டுப்பாட்டு அறை அமைக்கப்பட்டுள்ளது.

தஞ்சை கலெக்டர் அலுவலகத்திலுள்ள கட்டுப்பாட்டு அறைக்கு, பொதுமக்கள் எந்நேரமும் மேற்கண்ட டெலிஃபோன் எண்ணில் தகவல் தெரிவிக்கலாம்.

மேலும் கடலோர பாதிப்புகள் குறித்த தகவல்களை மீனவர்கள், 1,093 ன்னும் இலவச டெலிஃபோன் எண்ணில் தெரிவிக்கலாம். இதுகுறித்து தகவல்களை தெரிவிக்கும் வகையில், பஞ்., அலுவலகம், பஞ்., யூனியன் அலுவலகம், பள்ளிகள், தாலுகா, ஆர்.டி.ஓ., அலுவலகங்களில் இலவச ஃபோன் நம்பர்களை எழுதி, பொதுமக்கள் அறியும் வகையில் ஒட்டி வைத்து, அறிவிக்க வேண்டும்.

மழை வெள்ளம் குறித்து தீயணைப்புத்துறையினர் விழிப்புணர்வு நிகழ்ச்சிகளை நடத்த வேண்டும். வாய்க்கால் உடைப்புகளை சீர்செய்யவும், ஆக்கிரமிப்புகளை அகற்றவும் பொதுப்பணித்துறையினர் நடவடிக்கை எடுக்க வேண்டும். மணல் மூட்டை, சவுக்கு கட்டை ஆகியவற்றை தேவையான அளவு இருப்பு வைக்க வேண்டும். நுகர்பொருள் வாணிப கழகத்தில் போதுமான அளவு அத்தியாவசிய பொருட்கள் இருப்பு வைக்க வேண்டும்.

அவசர காலங்களில் பொதுமக்களை பாதுகாப்பாக இடம் பெயர செய்து, தற்காலிகமாக வசிக்க தங்கும் இட வசதியை தயார் நிலையில் ஏற்படுத்தி வைக்க வேண்டும். இவ்வாறு கலெக்டர் பேசினார். தஞ்சை டி.ஆர்.ஓ., சுரேஷ்குமார், ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குனர் வரதராஜன், பயிற்சி கலெக்டர் ராகுல்நாத் உள்பட அனைத்துத்துறை அதிகாரிகள், அலுவலர்கள் ஆலோசனைக் கூட்டத்தில் பங்கேற்றனர்.

## தேயிலை தோட்டங்களில் பசுந்தேயிலை வரத்து அதிகரிப்பு

கோத்தகிரி:கோத்தகிரி சுற்றுவட்டார பகுதிகளில் கடந்த சில நாட்களாக பெய்துவரும் கனமழையால், தேயிலை தோட்டங்களில், பசுந்தேயிலை மகசூல் படிப்படியாக அதிகரித்து வருகிறது.

நீலகிரி மாவட்டத்தில் கடந்த மாதம் பெய்த தென்மேற்கு பருவமழை, கோத்தகிரியில் பகுதியில் மட்டும் பொய்த்தது.

இதனால், நீர் ஆதாரங்கள் வறண்டு, குடிநீர் தட்டுப்பாடு நிலவியது. தவிர, விவசாய நிலங்களில் ஈரப்பதம் குறைந்த நிலையில், மகசூலும் வெகுவாக குறைந்தது.

தொழிலாளர்கள் மற்றும் விவசாயிகள் இழப்பை சந்தித்தனர். மழைப் பெய்தால் மட்டுமே, மகசூல் அதிகரிக்கும் என்ற நிலையில், கடந்த சில நாட்களாக, கோத்தகிரி மற்றும் சுற்றுவட்டாரப் பகுதிகளில் பரவலாக கனமழை பெய்துவருகிறது.

கோத்தகிரியில் நேற்று முன்தினம் 16 மி.மீட்டரும், கோடநாட்டில் 7.6 மி.மீட்டரும் மழை பதிவியாகி உள்ளது.

இதனால், தேயிலை தோட்டங்களில் இலைகள் துளிர்விட்டு, பசுந்தேயிலை மகசூல்

அதிகரித்துள்ளது.

இதற்கிடையில், ஒரு கிலோ பசுந்தேயிலைக்கு குறைந்தப்பட்சம் 18 ரூபாய் வரை விலைக் கிடைக்கிறது.

மேலும், உரமிடுவதற்கு ஏதுவான ஈரப்பதம் கிடைத்துள்ளதால், உரமிடுவதிலும் விவசா யிகள் முனைப்பு காட்டியுள்ளனர்.

எனவே, "தேயிலை தோட்டங்களின் இடையே நடவு செய்வதற்கும், ஊடுப்பயிராக சில்வர் ஓக் மற்றும் பழமரங்களை தோட்டக்கலை துறை சார்பில், மானிய விலையில் வழங்க வேண்டும்' எனவும், விவசாயிகள் வலியுறுத்தி உள்ளனர்.

### மாவட்டத்தில் சராசரி மழையளவு 13 மி.மீ.,

திருச்சி: திருச்சி மாவட்டத்தில் நேற்று முன்தினம் மாலை நல்ல மழை பெய்தது. அதன்படி, லால்குடி, 16 மில்லி மீட்டர், மணப்பாறை, 9.80, திருச்சி ஏர்போர்ட், 30.90, திருச்சி டவுன், 45.20, பொன்னணியாறு அணை, 30, நவலூர் கொட்டப்பட்டு, 57.30, வாத்தலை அணைக்கட்டு, சமயபுரம், 5, கோவில்பட்டி, 11.20, பொன்மலை, 32.40, திருச்சி ஜங்ஷன், 40, மேலணை, 5, துவாக்குடி, 6 மில்லி மீட்டர் என, மொத்தம், 299 மில்லி மீட்டர் மழை பெய்தது. மாவட்டம் முழுவதும் சாராசரியாக, 13 மில்லிமீட்டர் மழையளவு பதிவானது.

### கோழி வளர்ப்பு பயிற்சி முகாம்

கரூர்: மானியத்தில் கடன் பெற்றவர்களுக்கு, கோழி வளர்ப்பு குறித்த பயிற்சி முகாமை, கரூர் கலெக்டர் ஜெயந்தி துவக்கி வைத்தார்.

கால்நடை பராமரிப்புத்துறை, கால்நடை பல்கலை பயிற்சி மையம் சார்பில், கரூர் அருகேயுள்ள புன்செய் தோட்டக்குறிச்சியில், பண்ணை முறையில் நாட்டுக்கோழி, கறிக்கோழி வளர்ப்பு பயிற்சி முகாம் நடந்தது. இதில் கலெக்டர் ஜெயந்தி தலைமை வகித்து துவக்கி வைத்தார்.

கோழிப்பண்ணை தொழிலை ஊக்குவிக்கும் விதத்தில், 50 சதவீதம் மானியத்தில், கோழி வளர்ப்புத்திட்டம் கீழ், கடந்தாண்டு, 12.16 லட்சம் ரூபாய் நிதி ஒதுக்கீட்டில்,

35 நபர்களுக்கு கடன் அளிக்கப்பட்டுள்ளது. நடப்பு நிதியாண்டில், 82.20 லட்சம் ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

விவசாயிகளுக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள நிதிக்குள், நாட்டுக்கோழி அல்லது கறிக்கோழி வளர்ப்பு என, ஏதேனும் ஒரு தொழிலை செய்யலாம். இந்தாண்டுக்கு முதல்கட்டமாக பயனாளிகளிடம் இருந்து விண்ணப்பங்கள் பெறப்பட்டு, வங்கியின் மூலம் முன் அனுமதி பெற்று, 80 பயனாளிகள் தேர்வு செய்யப்பட்டுள்ளனர்.

இதில் நாட்டுக்கோழி வளர்ப்புக்கு, 50 பயனாளிகள், கறிக்கோழி வளர்ப்புக்கு, 30 பயனாளிகள் என மொத்தம், 80 பேருக்கு கோழிப்பண்ணை வளர்ப்பு குறித்த பயிற்சி துவங்கப்பட்டுள்ளது. இந்த பயிற்சி முகாம், மூன்று நாட்கள் நடக்கிறது. முகாமில் கால்நடை பராமரிப்புத்துறை இணை இயக்குனர் கோபிநாத், கால்நடை பல்கலை பயிற்சி மற்றும் ஆராய்ச்சி மைய இணைபேராசிரியர் அகிலா, உதவி இயக்குனர் குழந்தைசாமி, டவுன் பஞ்சாயத்து தலைவர் பெரியண்ணன் உட்பட பலர் பங்கேற்றனர்.

## சம்பா சாகுபடி விதை நெல் வினியோகிக்க ஏற்பாடு

கரூர்: "சம்பா சாகுபடிக்கு விதை நெல் அதிக அளவில் வினியோகம் செய்ய ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது' என, கரூர் விதை ஆய்வு துணை இயக்குனர் ரமேஷ்பாபு கூறினார்.

இதுகுறித்து அவர் வெளியிட்ட செய்திக்குறிப்பு:

கரூர் மாவட்ட காவிரி டெல்டா பாசன பகுதிகளில், சம்பா நெல் சாகுபடி பணிகள் முழுவீச்சில் நடந்து வருகிறது. விவசாயிகளுக்கு தேவையான சான்று பெற்ற நெல்விதைகள், வேளாண்மை விரிவாக்க மையம், தொடக்க வேளாண்மை கூட்டுறவு மையங்கள், தனியார் விதை விற்பனை நிலையங்களில் வினியோகம் செய்யப்படுகிறது. மேலும் நெல் விதைகளை வாங்கும் போது, விற்பனை ரசீது கட்டாயம் கேட்டு பெற வேண்டும். அந்த விற்பனையின் போது, ரசீதில் குவியல் எண், காலாவதி நாள் கண்டிப்பாக குறிப்பிட்டு பெற வேண்டும்.

## நாற்றங்கால் பண்ணையில் மரக்கன்றுகள்...விற்பனை! பசுமை போர்வை திட்டத்தில் முயற்சி

ரிஷிவந்தியம்:பசுமை போர்வை திட்டத்தின் கீழ் ரிஷிவந்தியம் அடுத்த சித்தால் வனத்துறை நாற்றங்கால் பண்ணையில் பல மரக்கன்றுகள் உற்பத்தி செய்து விற்பனை செய்யப்படுகிறது.

பருவமழை காலங்களில் நட்டு வளப்பதற்கு ஏற்ற சூழல் நிலவுவதால் மரக்கன்றுகளை வாங்கி செல்வதில் பலரும் ஆர்வம் காட்டி வருகின்றனர்.

நாற்றங்கால் பண்ணை

ரிஷிவந்தியம் பகுதியை சுற்றியிருந்த இயற்கை காடுகள் அழிக்கப்பட்டு சமூக காடுகள் திட்டத்தின் கீழ் யூக்கலிப்டஸ் மரங்கள் வளர்க்கப்படுகிறது.

வனத் துறை மூலம் கன்றுகள் நட்டு பராமரித்து தகுந்த பருவத்தில் அறுவடை செய்து பேப்பர் உற்பத்திக்கு அனுப்பி வைக்கப்படுகிறது. இப்பகுதியில் நட தேவையான மரக்கன்றுகளை உற்பத்தி செய்ய பாவந்தூர் தக்கா அருகே சித்தால் நாற்றங்கால் பண்ணை அமைக்கப்பட்டுள்ளது.

இங்கு ஆண்டுக்கு 6 லட்சத்து 68 ஆயிரம்

யூக்கலிட்டஸ் மரக்கன்றுகள் உற்பத்தி செய்து மழைக் காலங்களில் நட அனுப்பி வைக்கப்படுகிறது. இந்த நாற்றங்கால் பண்ணையில் காடுகளில் நட தேவையான மரக்கன்றுகள் மட்டுமே உற்பத்தி செய்யப்பட்டது.

பசுமை போர்வை திட்டம்

இந்நிலையில் கடந்த 2011ம் ஆண்டு வீசிய தானே புயலில் விழுப்புரம்

மாவட்டத்தில் பல மரங்கள் வேருடன் சாய்ந்தன. இதனால் புதிதாக மரக்கன்றுகளை நட்டு வளர்க்க அரசு தீவிர முயற்சி எடுத்து வருகிறது. மரங்களை அதிகளவு வளர்க்கும் வகையில் பசுமை போர்வை திட்டத்தை அரசு துவக்கி உள்ளது. இதன்படி அனைவரும் மரம் வளர்க்க ஊக்குவித்து வருகிறது. இதற்கு தேவையான மரக் கன்றுகளை அரசு நாற்றங்கால் பண்ணையில் அதிகளவில் உற்பத்தி செய்து விற்க உத்தரவிட்டது.

சித்தால் நாற்றங்கால் பண்ணையில் முதன்முறையாக பலவகையான மரக்கன்றுகள் உற்பத்தி செய்யும் பணி நடந்து வருகிறது. திருக்கோவிலூர் மண்டல மேலாளர் திருப்பதி தலைமையில், வனச்சரக அலுவலர் சோமசுந்தரம், வனவர் சத்தியமூர்த்தி மேற்பார்வையில் கூலித் தொழிலாளர்களை கொண்டு மரக்கன்றுகள் வளர்க்கப்படுகிறது.

20 ஆயிரம் கன்றுகள்

வில்வம், பலா, முந்திரி, பூவரசு, காட்டுவாகை, தூங்கு மூஞ்சி, வாகை, தேக்கு, நெல்லி, மகாகனி, அரசு, பாதம் உள்ளிட்ட பல மரக்கன்றுகள் வளர்த்து விற்பனை செய்யப்படுகிறது. இவை வீரிய ஒட்டு ரகங்கள் என்பதால் விரைவாக வளர்ந்து பலன்தருகின்றன. இப்பண்ணையில் தற்போது 20 ஆயிரம் மரக் கன்றுகள் உற்பத்தி செய்து விற்பனைக்கு தயாராக உள்ளன.

அரசு அலுவலகம், பள்ளி, வீடு உள்ளிட்ட இடங்களில் வளர்ப்பதற்கு தேவையான மரக்கன்றும் கிடைப்பதால் பலர் ஆர்வமுடன் வாங்கிச் செல்கின்றனர்.

ஒரு மரக்கன்று 16 ரூபாய் என்ற விலைக்கு விற்பனை செய்யப்படுகிறது. தனியார் பண்ணைகளிலும், வாரச் சந்தைகளிலும் விற்கப்படும் மரக்கன்றுகளை விட சித்தால் பண்ணையில் பாதி விலைக்கு விற்பனை செய்யப்படுகிறது. தற்போது பருவமழை பெய்து வருவதால் சுற்றுச் சூழல் குளிர்ச்சியாகவும், மண்ணின் ஈரத்தன்மை அதிகரித்தும் காணப்படுகிறது.

இத்தருணத்தில் மரக்கன்றுகளை நட்டு பராமரிக்க ஏற்ற தருணமாக உள் ளது. மரக்கன்றுகள் தேவைப் படுவோர் சித்தால் நாற்றங்கால் பண்ணைக்கு 95855 01114 என்ற மொபைல் போனில் தொடர்பு கொள்ளலாம்.

ஊராட்சிகளில் மரங்கள்

ஒவ்வொரு ஊராட்சிகளிலும் மரக்கன்றுகளை நட்டு வளர்க்க அரசு அறிவுரை வழங்கியுள்ளது. ஊராட்சி தலைவர்கள் தங்கள் பகுதிக்கு தேவையான மரக்கன்றுகளை வனத்துறை நாற்றங்கால் பண்ணையில் குறைந்த விலையில் வாங்கி மக்களுக்கு வழங்கி மரங்களை வளர்க்க ஊக்குவிக்க வேண்டும். இதன் மூலம் சுற்றுசூழலும், இயற்கை வளமும் பாதுகாக்கப்படும்.

## மரவள்ளி பயிர் சாகுபடி செய்வதில் விவசாயிகள்...ஆர்வம்! திண்டிவனம் பகுதியில் விளைச்சல் அமோகம்

திண்டிவனம்:திண்டிவனம் பகுதியில் மரவள்ளி பயிர் சாகுபடி செய்வதில் விவசாயிகள் அதிக ஆர்வம் காட்டி வருகின்றனர்.

திண்டிவனம் அடுத்த அடசல், கிளாப்பாக்கம், நடுக்குப்பம், குரும்புரம் ஆகிய கிராமங்களில் உள்ள விவசாயிகள் தங்களின் நிலங்களில் தர்பூசணி, மணிலா,

நெல், கேழ்வரகு, கம்பு ஆகிய பயிர்களை சாகுபடி செய்து வந்தனர்.

மின்சார பற்றாக்குறை, கூலி ஆட்கள் தட்டுப்பாடு மற்றும் தண்ணீர் பிரச்னை ஆகிய காரணங்களால் கடந்த சில ஆண்டுகளாக விவசாயிகள் பயிர் செய்யவதில் அதிக ஆர்வம்
காட்டவில்லை.

தற்போது பெரும்பாலான விவசாயிகள் மானாவாரி மரவள்ளி பயிர் செய்ய அதிக ஆர்வம் காட்டி வருகின்றனர். மானாவாரி மரவள்ளி பயிர் சாகுபடி செய்வதால் உரம், பூச்சிகொல்லி மருந்து, தண்ணீர் அதிகளவில் தேவைப்படுவதில்லை.

குறைந்த தண்ணீர்

மாதத்தில் ஒரு நாள் மழை பெய்தால் போதும், அந்த மழை தண்ணீரிலேயே வளர்ந்து மரவள்ளி கிழங்கு உற்பத்தியாகி விடுகிறது. இந்த மரவள்ளி செடிகளை கால் நடைகள் மேய்வதில்லை, விவசாயிகள், காட்டாமணி மரவள்ளி பயிர் செய்வதால் இதை திருடர்கள் திருடிச் சென்று விற்பனை செய்ய முடியாது.

விவசாயிகள் அறுவடை செய்தபின், 72 கிலோ எடை யுள்ள மரவள்ளி கிழங்கு மூட்டையை 500 ரூபாய் என சேலம் பகுதியில் உள்ள மாவு மில்களில் விற்பனை செய்கின்றனர்.

குறைந்த செலவு

தண்ணீர் பிரச்னை, ஆட்கள் தேவை ஏதுமின்றி குறைந்த செலவில் மரவள்ளி சாகுபடி செய்து லாபம் பெற முடிகிறது.

இது குறித்து நடுக்குப்பம் கிராமத்தில் மரவள்ளி கிழங்கு சாகுபடி செய்துள்ள விவசாயி தனஞ்செழியன் கூறுகையில், மரவள்ளியில் ஊடு பயிர்கள் செய்ய முடியாது. மர வள்ளி செடிக்கு விதைகள் கிடையாது.

கொள்ளிமலையில் உள்ள விவசாயிகள் அறுவடை செய்யும் மரவள்ளியின் கட்டைகளை விலைக்கு வாங்கி வந்து, அதை சிறு துண்டுகளாக்கி மழை பெய்தவுடன் நடவு செய்ய வேண்டும்.

நடவு செய்யும்போதும் மற்றும் அறுவடையின் போதும் மட்டும் ஆட்கள் தேவைப்படும். மற்ற நேரங்களில் ஆட்கள், எந்திரத்தின் செலவுகள் ஏதுமில்லை. மரவள்ளி பயிர் சாகுபடி செய்வதால் விவசாயிகளுக்கு லாபம் கிடைக்கின்றது என்றார்.

இதனால் திண்டிவனம் சுற்றுப்புற கிராமங்களில் உள்ள விவசாயிகள் மரவள்ளி பயிர் செய்வதில் அதிக ஆர்வம் காட்டி வருகின்றனர்.

## வடகிழக்கு பருவமழை முன்னெச்சரிக்கை: அதிகாரிகளுடன் கலெக்டர் ஆலோசனை

விழுப்புரம்:விழுப்புரம் மாவட்டத்தில் வடகிழக்கு பருவமழை முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் ஆலோசனை கூட்டம் நடந்தது.

விழுப்புரம் கலெக்டர் அலுவலகத்தில் வடகிழக்கு பருவமழையின் போது எடுக்க வேண்டிய முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் சம்பந்தமான ஆலோசனை கூட்டம் நடந்தது. கலெக்டர் சம்பத் தலைமை தாங்கினார்.

நேர்முக உதவியாளர் (பொது) பிரியா, ஆர்.டி.ஓ.,க்கள் அனுசுயாதேவி, ஜெயச்சந்திரன் முன்னிலை வகித்தனர். அலுவலக மேலாளர்கள் ராஜேந்திரன், சேதுராமன் உட்பட போலீசார், தீயணைப்பு வீரர்கள் பலர் கலந்து கொண்டனர்.

கூட்டத்தில் கலெக்டர் சம்பத் பேசியதாவது:

வடகிழக்கு பருவமழை அக்டோபர் மாதம் துவங்கவுள்ளதால் பொதுப்பணி துறையினர் மாவட்டத்தில் உள்ள அனைத்து ஏரி, குளங்களுக்கு நீர் வரத்து வாய்க்கால், நீர்நிலை புறம்போக்குகளில் உள்ள ஆக்கிரமிப்புகளை கண்டறிந்து உடனடியாக அகற்ற வேண்டும்.

ஏரி, குளங்களில் கரைகள் பலமாக உள்ளதா மற்றும் மழை தருணத்தில் நீர் நிரம்பும்போது உடைப்புகள் ஏற்படா வண்ணம் சரிபார்க்க வேண்டும். மணல் மூட்டைகளை தயார் நிலையில் வைத்திருக்க வேண்டும்.

ஊரக வளர்ச்சி துறை சார்பில் பி.டி.ஓ.,க்கள், ஊரணி, குளம் ஆகிய நீர்நிலை புறம்போக்குகளில் உடைப்புகளை சரி செய்ய வேண்டும். தீயணைப்பு துறையினர் மீட்பு உபகரணங்களை தயார் நிலையில் வைத்திருக்க வேண்டும்.

உணவு பொருட்கள் போதியளவு கையிருப்பு வைத்திருத்தல், சுகாதாரம் மற்றும் கால்நடை துறையினர் உரிய மருந்துகள் இருப்பு வைத்திருக்க வேண்டும்.

நெடுஞ்சாலை துறை மழைகாலங்களில் சாலைகளில் விழும் மரங்களை அப்புறப்படுத்த புல்டோசர், ஜே.சி.பி., இயந்திரங்களை தயார் நிலையில் வைத்திருக்க வேண்டும்.

வடகிழக்கு பருவமழையால் ஏற்படும் இன்னல்களை பொதுமக்கள் கலெக்டர்

அலுவலகத்தில் 24 மணி நேரம் செயல்படும் கட்டுப்பாட்டு அறை 1077 கட்டணமில்லா எண்ணை தொடர்பு கொண்டு தெரிவிக்கலாம்.
இவ்வாறு கலெக்டர் சம்பத் தெரிவித்துள்ளார்.

## விவசாயிகள் குறைகேட்பு

கள்ளக்குறிச்சி:கள்ளக்குறிச்சி ஆர்.டி. ஓ., அலுவலகத்தில் நேற்று விவசாயிகள் குறைகேட்பு கூட்டம் நடந்தது.
ஆர்.டி.ஓ., ராஜசேகரன் தலைமை தாங்கினார். தாசில்தார்கள் ஜவகர், பார்த்தசாரதி முன்னிலை வகித்தனர். ஆர்.டி.ஓ., நேர்முக உதவியாளர் கோகுலபத்மநாபன் வரவேற்றார். பொதுப் பணித் துறை உதவி பொறியாளர் சம்பத், வனசரகர் கொளஞ்சியப்பா, வேளாண்மை அலுவலர் பொன்னுராசன், கரும்பு அலுவலர் வெங்கடேசன் மற்றும் விவசாய சங்க பிரதிநிதிகள் ராமசாமி, குருநாதன், தங்கவேல் பங்கேற்றனர்.
கடும் வறட்சியினால் பாதித்த விவசாயிகளுக்கு அரசியல் குறுக்கீடு இன்றி நிவாரண உதவிகள் வழங்க வேண்டும். ஏரிகள், அணைகள், குளங்களின் நீர் வரத்து வாய்க்கால்களை தூர் வார வேண் டும், ஏரி ஆக்கிரமிப்புகளை அகற்ற வேண்டும்.
சங்கராபுரத்தில் ஆற்றில் கழிவு நீர் கலப்பதை தடுக்க வேண்டும். உழவர் பாதுகாப்பு அட்டை அனைத்து மக்களுக்கும் வழங்க வேண்டும் உட்பட பல கோரிக்கைகளை விவசாயிகள் எடுத்துரைத்தனர். விவசாயிகளின் கோரிக்கைகளுக்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்று ஆர்.டி.ஓ., ராஜசேகரன் தெரிவித்தார்.

## சோளம் பயிரிடுவதில் விவசாயிகள் ஆர்வம்

சின்னசேலம்:சின்னசேலம் தாலுகாவில் பங்காரம், நமச்சிவாயபுரம், தொட்டியம், நல்லாத்தூர் உள்ளிட்ட 30க்கும் மேற்பட்ட கிராமங்களில் 300க்கும் மேற்பட்ட ஏக்கரில் சோளம் பயிரிட்டுள்ளனர்.
3 மாத பயிரான சோளத்தை மே, ஜூன் மாதங்களில் விதைக்கின்றனர். கோ.30, கோ 28, ஏபி 1 உள்ளிட்ட புதிய ரகங்களை விதைக்கின்றனர். வெயில் மற்றும்

மழை ஆகிய இரண்டு சூழலையும் தாங்கக் கூடியதாகும். ஏக்கருக்கு 20-25 மூட்டை மகசூல் கிடைக்கும். ஒரு கிலோ 50-55 ரூபாய் வரை விற்கப்படுகிறது.

குறைந்த நீர், அதிக லாபம் உள்ளிட்ட காரணத்தால் விவசாயிகள் சோளம் பயிரிடுவதில் ஆர்வம் காட்டி வருகின்றனர்.

### விவசாயிகளுக்கு மேலாண்மை பயிற்சி

திண்டிவனம்:திண்டிவனம் வேளாண்மை அறிவியல் நிலையத்தில் கரும்பு விவசாயிகளுக்கு மேலாண்மை பயிற்சி நடந்தது.

கரும்பு மசூல் அதிகபடுத்தும் நோக்கில் நடந்த முகாமிற்கு தனுகா நிறுவன முதுநிலை ஆலோசகர் ஸ்ரீவத்சவா தலைமை தாங்கினார். வேளாண்மை அறிவியல் நிலைய தலைவர் சாத்தையா முன்னிலை வகித்தார். நவீன தொழில் நட்ப முறையில் குறைந்த செலவில் அதிக மகசூல் பெறுவது குறித்து மேலாளர் கணேசன், முனைவர்கள் அன்புமணி, பிரபு ஆகியோர் விளக்கினர். புதுச்சேரி கரும்பு ஆலை அலுவலர் முரளி மற்றும் சொட்டு நீர் உழவியல் நிபுணர் தவராஜன், முனைவர் செந்தமிழ், மேகநாதன் ஆகியோர் விளக்க உரையாற்றினர். முன்னோடி விவசாயிகள் பங்காரு, கோகுலவாசன், ரமேஷ், தண்டபாணி, கணேசன் ஆகியோர் கவுரவிக்கப்பட்டனர்.

### புல் வெட்டும் பணி தீவிரம்

சின்னசேலம்:சின்னசேலம்-கள்ளக்குறிச்சி செல்லும் பைபாஸ் சாலையில் புல் வெட்டும் பணி நடந்து வருகிறது.

சின்னசேலம்-கள்ளக்குறிச்சி செல்லும் பைபாஸ் சாலையில் புல் மண்டி புதர்களாக இருந்தது. விஷ ஜந்துகளின் கூடாரமாக மாறி வாகன ஓட்டிகளை அச்ச மூட்டி வந்தது.

தினமலர் நாளிதழில் கடந்த மாதம் செய்தி வெளியானது. அதையடுத்து நெடுஞ் சாலைத் துறையினர் சின்னசேலம்- கள்ளக்குறிச்சி பைபாஸ் சாலையில் புல் அகற்றும் பணியில் தீவிரம் காட்டி வருகின்றனர்.

### கரும்பு விதை புல் விற்பனை

விழுப்புரம்:கூடுதல் லாபம் கிடைப்பதால், கரும்பு விதை புல்விற்பதில் விவசாயிகள் ஆர்வம் செலுத்தி வருகின்றனர்.

விழுப்புரம் மாவட்டத்தில் கரும்பு அதிகளவில் சாகுபடி செய்யப்படுகிறது. இங்கு விளையும் கரும்புகள் முண்டியம்பாக்கம், செம்மேடு, பெரியசெவலை, மூங்கில்துறைப்பட்டு, கச்சிராயபாளையம் ஆலைகளுக்கு எடுத்து செல்கின்றனர். மாவட்டத்தில் பரவலாக ஆலைகள் உள்ளதால் அறுவடை செய்யும் கரும்புகள், அதிக செலவின்றி எடுத்துச் செல்ல முடிகிறது. இதனால் இம்மாவட்டத்தில் விவசாயிகள் பலரும் ஆர்வமுடன் கரும்பு சாகுபடி செய்கின்றனர்.

தரமான விதை புல்களை தேவையான அளவு, சர்க்கரை ஆலைகள் நேரடியாக விளைவித்து விவசாயிகளுக்கு வழங்க முடிவதில்லை. பல விவசாயிகள், விதை புல்களை பெற்று, நடவு செய்கின்றனர். விதை கரும்புகள் விற்கும் விவசாயிக்கு ஆட்கள் கூலி, வாகன வாடகை செலவு மிச்சமாகிறது. விதை புல் வாங்கும் விவசாயிகள், தாங்களே வயலுக்கு ஆட்களை அழைத்து வந்து, தேவையான விதைக் கரும்புகளை துண்டுகளாக நறுக்கி, சொந்த செலவில் எடுத்துச் செல்கின்றனர்.

விதை புல் வாங்கும் விவசாயிகள், உடன் பணத்தை கொடுப்பதால், ஆலைக்கு கரும்புகளை அனுப்புவதை விட, பஞ்சமாதேவி உட்பட பல இடங்களில் விதை கருணைகளாக விற்பதையே பல விவசாயிகள் விரும்புகின்றனர்.

## நாட்டு கோழி வளர்க்க செப்., 23ல் பயிற்சி

நாமக்கல்: "செப்டம்பர், 23ம் தேதி, நாட்டுக்கோழி வளர்ப்பும் மற்றும் மூலிகை முதலுதவி மருத்துவமும் என்ற ஒரு நாள் பயிற்சி வகுப்பு நடக்கிறது' என, மருத்துவ ஆராய்ச்சி மையத் தலைவர் டாக்டர் மோகன் தெரிவித்துள்ளார்.

அவர் வெளியிட்டுள்ள அறிக்கை:

நாமக்கல், திருச்சி சாலை, கால்நடை மருத்துவமனை வளாகத்தில் அமைந்துள்ள, கோழிகளுக்கான மரபுசார் மூலிகை மருத்துவ ஆராய்ச்சி மையத்தில், பண்ணையாளர்களுக்கான நாட்டுக்கோழி வளர்ப்பும் மற்றும் மூலிகை முதலுதவி மருத்துவமும் என்ற பயிற்சி வகுப்பு, செப்டம்பர், 23ம் தேதி மதியம், 1.30 மணிக்கு நடக்கிறது.

ஆர்வம் உள்ள பண்ணையாளர்கள், பங்கேற்று பயன்பெறலாம். மேலும் விபரங்களுக்கு, 94432 51330, 04286 233230 என்ற எண்களில் தொடர்பு கொள்ளலாம்.

இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

## பசுந்தீவன அபிவிருத்தி திட்டத்தில் இலக்கு : நடப்பு ஆண்டு ரூ.1.08 கோடி மானியம்

நாமக்கல்: "மாநில பசுந்தீவன அபிவிருத்தி திட்டத்தில், நடப்பு ஆண்டு, 900 ஏக்கர் இலக்கு நிர்ணயிக்கப்பட்டு, 1.08 கோடி ரூபாய் மானியம் பெறப்பட்டுள்ளது' என, நாமக்கல் மாவட்ட கலெக்டர் தட்சிணாமூர்த்தி கூறினார்.

கால்நடை பராமரிப்புத் துறை சார்பில், பல்வேறு வகையான திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகிறது. கால்நடைகளின் சிகிச்சைக்கென, நாமக்கல் மாவட்டத்தில், நான்கு கால்நடை மரத்துவமனை, 89 கால்நடை மருந்தகம், மூன்று நாடமாடும் கால்நடை மருந்தகம், ஒரு கோழி நோய் ஆராய்ச்சி ஆய்வு கூடம் செயல்படுகிறது.

கிராமப்புற பெண்களின் பொருளாதார மேம்பாட்டுக்காக, அரசு சார்பில், விலையில்லா கறவை மாடுகள், மற்றும் ஆடுகள் வழங்கும் திட்டம் செயல்படுத்தப்பட்டுள்ளது. நாமக்கல் அடுத்த எலச்சிபாளையம் யூனியன், மண்டகபாளையம் பகுதியில் நடந்த முகாமை, நாமக்கல் மாவட்ட கலெக்டர் தட்சிணாமூர்த்தி நேரில் பார்வையிட்டார். அப்போது, பயனாளிகளிடம், விலையில்லா கறவை மாடுகளுக்கு வழங்கப்படும் தீவனங்கள், பால் கறவை திறன் குறித்து கேட்டறிந்தார்.

தொடர்ந்து, சின்னமணலியில் விலையில்லா ஆடுகளுக்கு தடுப்பூசி வழங்கும் முகாமை பார்வையிட்டு, மக்களிடம் குறைகளை கேட்டறிந்தார்.

நாமக்கல் மாவட்ட கலெக்டர் தட்சிணாமூர்த்தி கூறியதாவது:

தமிழக அரசு கால்நடை பராமரிப்புத் துறை சார்பில், பல்வேறு திட்டங்கள் செயல்படுத்தி வருகிறது. தமிழக முதல்வரின் விலையில்லா கறவை மாடுகள்

மற்றும் வெள்ளாடுகள், செம்மறி ஆடுகள் வழங்கும் திட்டத்தில், நாமக்கல் மாவட்டத்தில், 250 பயனாளிகளுக்கு, கறவை மாடுகள் வழங்கப்பட்டது. அதேபோல், 167 கிராங்களில், 9,894 பயனாளிகளுக்கு, 39 ஆயிரத்து, 576 ஆடுகள் வழங்கப்பட்டுள்ளது. அவை கடந்த ஆகஸ்ட் மாதம் வரை, 23 ஆயிரத்து, 594 குட்டிகள் ஈன்றுள்ளது. அதன் மூலம், மாநிலத்தில், நாமக்கல் மாவட்டம் இரண்டாம் இடம் பிடித்துள்ளது.

தீவனப் பற்றாக்குறையை சமாளிக்கவும், பால் உற்பத்தியை அதிகரிக்கவும், கறவை மாடுகளுக்கு பசுந்தீவனம் அளிப்பது அவசியமாகிறது. அதற்காக, மாநில அரசு பசுந்தீவன உற்பத்தி திட்டத்தை அறிவித்து செயல்படுத்தி வருகிறது. இத்திட்டத்தில், 0.25 ஏக்கரில், தீவனப்பயிராக, கோ 3, கோ 4 பயிரிடம் விவசாயிகளுக்கு, நூறு சதவீதம் மானியமாக, 3,000 ரூபாய் வழங்கபடுகிறது. கடந்த, 2012-13ம் ஆண்டில், இத்திட்டத்தில், 950 ஏக்கர் பசுந்தீவனம் பயிரிடப்பட்டு, 1,666 பயனாளிகளுக்கு, 1.14 கோடி ரூபாய் மானியமாக வழங்கப்பட்டுள்ளது. நடப்பு ஆண்டு, 900 ஏக்கர் இலக்கு நிர்ணயிக்கப்பட்டு, 1.08 கோடி ரூபாய் மானியம் பெறப்பட்டுள்ளது. அதற்காக பயனாளிகள் தேர்வு செய்யப்பட்டுள்ளனர்.

தற்போது, நாமக்கல் மாவட்டத்தில், ஐந்தாவது தவணையாக, மூன்று லட்சத்து, 37 ஆயிரத்து, 200 டோஸ் பெறப்பட்டு, கோமாரி நோய் தடுப்பூசி பணி மேற்கொள்ளப்பட்டுள்ளது. இந்த வாய்ப்பை பயன்படுத்தி, கால்நடைகளுக்கு தடுப்பூசி போட்டுப் பயன்பெறலாம்.

இவ்வாறு அவர் கூறினார்.

கால்நடை பராமரிப்புத்துறை இணை இயக்குனர் டாக்டர் பிரகாசம், துணை இயக்குனர் புருஷோத்தமன் உள்பட பலர் உடன் இருந்தனர்.

தினகரன்

## இன்றைய வேளாண் செய்திகள்

## 19.09.2013

### சான்று பெற்ற விதைகளை பயன்படுத்த வேண்டும் விதை சான்று துறை அறிவுரை

ராமநாதபுரம்: ராமநாதபுரம் மாவட்ட விவசாயிகள் சான்று பெற்ற விதை களை பயன்படுத்த வேண் டும் என விதை சான்று துறை அறிவுரை வழங்கி உள்ளது. ராமநாதபுரம் மாவட்டத்தில் பெரும்பாலான விவசாயிகள் ஒரு போகத்திலேயே நெல் மற்றும் தானியங்களை சாகுபடி செய்து வருகின்றனர். முக்கியமாக சென்ற ஆண்டு சாகுபடி செய்த நெல் மற்றும் சிறு தானியங்களை அடுத்த ஆண்டில் விதைப்புக்காக எடுத்து வைத்து பயன்படுத்துகின்றனர். அவ்வாறு எடுத்து வைக்கும் போது, விதைகளின் இனத்தூய்மை பற்றி அவ்வளவாக அக்கறை காட்டுவதில்லை. விதைக்காக எடுத்து வைக் கும் போது தனிக்களத்தி னையோ அல்லது சுத்த மான கொள்கலன்களை யோ பயன்படுத்துவதுல்லை. இதனால் விதை களில் கலப்பு ஏற்பட்டு பயிரிடப்படும் பயிர் ஒரே நேரத் தில் அறுவடைக்கு வருவதில்லை. மகசூல் பாதிக்கப்படுகிறது, விவசாயிகளுக்கு லாபம் குறைகிறது. விவசாயிகள் அதிக மகசூல் பெற்றிட ஒவ்வொரு ஆண்டும் சான்று பெற்ற விதைகளை மட்டும் பயன்படுத்திட வேண்டும். சான்று பெற்ற விதைகள் கல், மண், பதர் இல்லாதவை, இனத்தூய்மை கொண்ட வை. சான்று விதைகளை பயன்படுத்தினால் பயிரிடப்படும் பயிர் ஒரே நேரத்தில் அறுவடைக்கு வரும். அதிக மகசூலையும் தருவதுடன், நல்ல லாபமும் பெற்றிடலாம்.

சான்று பெற்ற விதை களின் கொள்கலன்களில் வெள்ளை அல்லது நீல நிற அட்டை கட்டப்பட்டிருக் கும். அத்துடன் ஒபெல் பச்சை நிற உற்பத்தியாளர் அட்டை கட்டப்படிருக்கும். அந்த அட்டைகளில் விதை களின் விபரங்கள் அச்சிடப்பட்டிருக்கும். இந்த அட்டைகளை வைத்து சான்று பெற்ற விதைகளை எளிதில் அடையாளம் காணலாம்.

எனவே விவசாயிகள் சான்று பெற்ற விதைகளை பயன்படுத்தி லாபம் அடைய

வேண்டும் என ராமநாதபுரம் விதைச் சான்று உதவி இயக்குநர் மோகன் தெரிவித்துள்ளார்.

**குஜராத்தில் விவசாய தொழில்நுட்ப கண்காட்சி கடலூர் விவசாயிகள் பங்கேற்பு**

கடலூர், : இந்தியா, டென்மார்க், துருக்கி, எகிப்து, இந்தோனிசியா உள்ளிட்ட 15 நாடுகளின் சார்பில் விவசாய தொழில்நுட்ப கண்காட்சி, விவசாய உற்பத்தியின் இடர்பாடுகள் குறித்த கருத்தரங்கு, சாதனை விவசாயிகளுக்கு பாராட்டு, உலகளாவிய விவசாயிகளுடனான சந்திப்பு ஆகிய நிகழ்வுகள் குஜராத் மாநிலம் அகமதாபாத் காந்தி நகரில் நடந்தது.

தமிழகத்தில் இருந்து 150 விவசாயிகள் கலந்து கொண்டனர். கடலூர் மாவட்டத்திலிருந்து உழவர் கூட்டமைப்பின் தலைவர் ரவீந்திரன், ஆத்மா குழு தலைவர் அண்ணாகிராமம் ராஜேந்திரன், பரங்கிப்பேட்டை வீரபாண்டியன், ஆத்மா உறுப்பினர் புவனகிரி பாஸ்கரன் மற்றும் வேளாண் அலுவலர் ஞானசேகரன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

கண்காட்சி குறித்து ரவீந்திரன் கூறும்போது, விவசாயத்தில் மற்றைய நாடுகளை விட நாம் பத்தாண்டுகள் பின் தங்கியிருப்பதை உணர முடிந்தது. தற்போதுதான் நாம் விவசாயத்தில் இயந்திரங்களை பயன்படுத்த தொடங்கியிருக்கிறோம். ஆனால் மற்ற நாட்டு விவசாயிகள் மண்ணை பண்படுத்துவதில் இருந்து விதை விதைப்பது, தேவையான நீர்பாய்ச்சுவது, களை எடுப்பது. உரம் இடுவது, அறுவடை செய்வதில் இருந்து இயந்திரங்களையும் தொழில்நுட்பங்களையும் திறமையாக கையாண்டு வருவதை அறிய முடிந்தது. குறைந்த அளவில் திறன்களை பயன்படுத்தி மும்மடங்கு விளைச்சல் செய்து வருகிறார்கள்.நம் நாட்டு விவசாயிகளிடம் இருக்கும் ஆர்வத்தையும், அனுபவ தொழில்நுட்பங்களையும் வெளிநாட்டு விவசாயிகள் பாராட்டினார்கள், என்றார்.

**தேயிலை பயிருக்கு ஊடே மலைகாய்கறி சாகுபடி**

ஊட்டி: சுற்று வட்டார பகுதிகளில் விவசாயிகள் தேயிலை செடிகளுக்கு நடுவே மலை காய்கறிகளை பயிரிட்டு வருகின்றனர். நீலகிரி மாவட்டத்தின் மிக

முக்கியமான தொழில் தேயிலை விவசாயமாகும். அடுத்தபடியாக மலை காய்கறிகள் விவசாயம் பெருமளவு மாவட்டம் முழுவதும் பயிரிடப்படுகிறது. நீலகிரியில் விளைவிக்கப்படும் மழை காய்கறிகள் சென்னை, கோவை போன்ற தமிழகத்தின் முக்கிய நகரங்களுக்கும், அண்டை மாநிலங்களான கர்நாடகா, கேரளா போன்ற மாநிலங்களுக்கும் லாரிகள் மூலம் அனுப்பி வைக்கப்படுகின்றன. மேலும் விளையும் இடத்திலேயே  கிடைக்கும் என்பதால், நீலகிரிக்கும் வரும் சுற்றுலா பயணிகளும் அதிகளவு காய்கறிகளை வாங்கி செல்கின்றனர். இந்நிலையில் மாவட்டத்தில் உள்ள ஒரு சில தேயிலை விவசாயிகள் வருமானத்தை பெருக்கும் வகையில் தேயிலை தோட்டங்களுக்கு நடுவே ஊடுபயிராக மலை காய்கறிகளான உருளைகிழங்கு, கேரட் போன்றவற்றை தற்போது பயிரிட்டு வருகின்றனர். இதனால் தேயிலைக்கும், காய்கறிக்கும் என இரு வருமானம் கிடைப்பதாக விவசாயிகள் கூறி வருகின்றனர். ஊட்டி மஞ்சூர் சாலையில் உள்ள காத்தாடி மட்டம், தேவர் சோலை, பி. மணியட்டி, கீழ் கைகாட்டி மற்றும் மஞ்சூர் உட்பட பல்வேறு பகுதிகளில் தேயிலை பயிர்களுக்கு நடுவே மலைகாய்கறிகளை பயிரிட்டு விவசாயிகள் லாபம் ஈட்டி வருகின்றனர்.

**மலிவு விலை காய்கறி கடைகளில் வெங்காயம், தக்காளி தட்டுப்பாடு**

தாம்பரம், :  தமிழக அரசு சார்பில் சென்னை மற்றும் புறநகர் பகுதிகளில் மலிவு விலை காய்கறி கடைகள் 31 இடங்களில் திறக்கப்பட்டன. தமிழ்நாடு மட்டுமின்றி, ஆந்திரா, கேரளா, கர்நாடகா உள்ளிட்ட பிற மாநிலங்களில் இருந்து காய்கறிகள் கொண்டு வரப்பட்டு, இந்த கடைகள் மூலம் மானிய விலையில் பொது மக்களுக்கு விற்கப்படுகிறது.


மார்க்கெட் விலையை விட குறைந்த விலையில் காய்கறிகள் கிடைப்பதால் பொதுமக்களிடம் வரவேற்பு பெற்றுள்ளது. காலை 8 மணிக்கு திறக்கப்படும் இந்த கடைகளில் மதியம் 12 மணிக்குள் விற்று தீர்ந்துவிடுகிறது.

கடந்த 4 நாட்களாக பெரிய வெங்காயம் எந்த மலிவு விலை கடைகளிலும் விற்கப்படவில்லை. பொது மக்கள் தினமும் சமைக்கும் சாம்பார், காரக்குழம்பு,

கூட்டு, பொரியல் என அனைத்து உணவு வகைகளுக்கும் வெங்காயம் அவசியமாகிறது. இந்நிலையில் மலிவு விலை காய்கறி கடைகளில் பெரிய வெங்காயம், தக்காளிக்கு தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளதால் பொதுமக்கள் அதிருப்தி அடைந்துள்ளனர்.

பொதுமக்கள் கூறுகையில், காய்கறி வகைகளை இங்கு வாங்கும்போது பணத்தை மிச்சம் செய்தோம். இப்போது வெளி மார்க்கெட்டில் வாங்க வேண்டிய நிலை உள்ளது. அரசு வெங்காய தட்டுப்பாட்டை தீர்க்க வேண்டும். காலை 8 மணிக்குள் சென்றால் மட்டுமே மலிவு விலையில் காய்களை வாங்க முடிகிறது. 10 மணிக்கு மேல் கடைக்கு சென்றால் காய்கறிகள் கிடைப்பதில்லை என்றனர்.

**மாநிலங்களுக்கு மத்திய அரசு வேண்டுகோள் வெங்காயம் விலை உயர்வை உடனே கட்டுப்படுத்துங்கள்**



புதுடெல்லி : வெங்காயம் விலை உயர்வை கட்டுப்படுத்துங்கள் என்று மாநிலங்களுக்கு மத்திய அரசு நேற்று வேண்டுகோள் விடுத்துள்ளது. வெங்காயம் விளைச்சல் உள்ள மாநிலங்களில் வரத்து குறைந்ததால், நாடு முழுவதும் கடந்த ஜூலை முதல் வெங்காயம் விலை மொத்த மார்க்கெட்டிலும் சில்லரை விற்பனையிலும் கிடு கிடுவென உயர்ந்தது. டெல்லியில் ஒரு கிலோ வெங்காயம் ரூ.80க்கு விற்கப்படுகிறது.

தட்டுப்பாடு நிலையை பயன்படுத்தி, வெங்காயத்தை பதுக்கி வைத்து விலையை செயற்கையாக அதிகரிக்கும் வியாபாரிகள் மற்றும் ஊக வர்த்தகர்கள் மீது நடவடிக்கை எடுத்து விலையை கட்டுப்படுத்த வேண்டும் என்று மாநிலங்களுக்கு

மத்திய அரசு வேண்டுகோள் விடுத்துள்ளதாக மத்திய உணவு மற்றும் நுகர்வோர் விவகாரத்துறை அமைச்சகத்தின் அதிகாரி தெரிவித்தார்.

விளைச்சல் குறைந்துள்ளதால், நாடு முழுவதும் தட்டுப்பாடு நிலவுகிறது. எனவே தட்டுப்பாடு இல்லாமல் மார்க்கெட்களுக்கு வெங்காயம் சப்ளை செய்ய நடவடிக்கை எடுக்கும்படி மகாராஷ்டிரா அரசை கேட்டுக் கொண்டுள்ளதாகவும் அந்த அதிகாரி கூறினார். இந்த ஆண்டு (2013) நாடு முழுவதும் தேவைக்காக சுமார் 27.5 லட்சம் டன் வெங்காயம் இருப்பு வைக்கப்பட்டது. இதில் 15.50 லட்சம் டன் வெங்காயம் மகாராஷ்டிரா மாநிலத்திலும், குஜராத், பீகார், கர்நாடகா, ம.பி., உ.பி., ராஜஸ்தான், தமிழ்நாடு ஆகிய மாநிலங்களில் தலா 1.5 லட்சம் டன் கிடங்குகளில் இருப்பு வைக்கப்பட்டது.

சாதாரணமாக, வரத்து குறைவாக உள்ள ஜூன் முதல் ஆகஸ்ட் வரையிலான 3 மாதங்களில் இந்த இருப்பு வெங்காயம் பயன்படுத்தப்படும். மழை காரணமாக, வெங்காயம் அறுவடை பாதிக்கப்பட்டது. இதனால், கர்நாடகா, ஆந்திரப் பிரதேசம் ஆகிய மாநிலங்களிலிருந்து புதிய வெங்காயம் வரத்து தாமதமாகியுள்ளது. இதுவே விலை உயர்வு தொடர்வதற்கு முக்கிய காரணமாகும்.

“ஒவ்வொரு ஆண்டும் செப்டம்பர் முதல் நவம்பர் வரையில் விலை அதிகமாகவும், ஜனவரி முதல் மார்ச் வரையில் விலை குறைவாகவும் இருக்கும். பொதுவாக ஆகஸ்ட் முதல் செப்டம்பர் வரையில் வெங்காயம் தட்டுப்பாடு நிலவும். ஆந்திரா, கர்நாடகா, தமிழ்நாடு ஆகியவற்றில் வெங்காயம் அறுவடை நடந்து வருகிறது. மார்க்கெட்டிற்கு வரத் தொடங்கியதும் விலை கணிசமாக குறையும்".

பிரச்னைக்கு காரணம்

மழை, பெட்ரோல், டீசல் விலை உயர்வு, பதுக்கல் ஆகியவை வெங்காயம் விலை

உயர்வுக்கு முக்கிய காரணமாகச் சொல்லப்படுகிறது. இதனால் நாட்டின் பல பகுதிகளில் வெங்காயம் விலை கிலோ ரூ.75 முதல் ரூ.110 வரையில் உயர்ந்துள்ளது. அரசு நடவடிக்கை: வெங்காயம் விலை உயர்வை கட்டுப்படுத்தவும், குறைக்கவும், சப்ளையை அதிகரிக்கவும் மத்திய அரசு பல்வேறு நடவடிக்கைகளை எடுத்தது. அதில், வெளிநாடுகளில் இருந்து இறக்குமதி செய்யவும் ஏற்றுமதிக்கு கட்டுப்பாடுகள் விதித்ததும் அடங்கும்.

‘‘இந்த விலை உயர்வுக்கு அரசு ஒன்றும் செய்ய முடியாது. வெங்காயத்தை அரசு விற்கவில்லை'' , மத்திய அமைச்சர் கபில் சிபல்.

“வெங்காயம் விலை உயர்ந்தது விவசாயிகளுக்கு நல்லதுதானே"' , மத்திய அமைச்சர் சரத்பவார்

கண்டனம்: டெல்லியில் மத்திய அமைச்சர்கள் தெரிவித்த கருத்துக்கு பா.ஜ., இந்திய கம்யூனிஸ்ட் உட்பட எதிர்க்கட்சிகள் கண்டனம் தெரிவித்துள்ளன.

இன்றைய வேளாண் செய்திகள்

19.09.2013

**அதிக மகசூல் தரும் வலம்பிரி தென்னை**



உலக அளவில் 93 நாடுகளில் தென்னை வளர்கிறது. அந்த அந்த நாடுகளில் அதிகம் தென்னை வளரும் பகுதியின் ஊர்கள் பெயரை சொல்லி தென்னை ரகங்களை அடையாளம் சொல்வது வழக்கம். இலங்கை யாழ்பாணத்தில் வளரும் நெட்டை ரகத்தை யாழ்பாணம் என்றும், அந்தமான் நிக்கோபர் தீவுகளில் வளரும் ரகத்தை அந்தமான் நிக்கோபர் தென்னை ரகம் என்றும், மலேசியாவில் வளரும் ரகங்கள் மலேசியன் குட்டை மற்றும் மலேசியன் மஞ்சள் என்றும் அடையாளம் காண பெயர் சொல்லி அழைப்பது வழக்கம். தமிழகத்தில் குமரி மாவட்டத்தில் உள்ள ஈத்தாமொழி, நெட்டை, பட்டுக்கோட்டை, பொள்ளாச்சி நெட்டை தென்னை என்றும் உள்ளூர் ரகம் பல உள்ளது. தென் இந்தியாவில் தென்னை அதிகம் வளர்கிறது என்பது அனைவருக்கும் தெரிந்த உண்மை.

**<u>தென்னை மரங்களின் ரகம்</u>**

தென் இந்தியாவில் கேரள கடற்கரைகளில் தான் முதன்முதலாக காட்டு மரங்களாக தென்னை வளர்ந்ததாக வரலாறு கூறுகிறது. தென்னை மரங்களை வேளாண்மை

பயிராக பயிரிட தொடங்கிய பின் தென்னை மரங்களின் மகசூல் திறனை வைத்து ரகம் பிரித்தார்கள். இது குட்டை, நெட்டை என்றும், இதில் எது இளநீருக்கு தகுதியானது, பருப்புக்கு தகுதியான மரம், எண்ணெய் அளவில் அதிகம் கிடைக்கும் மரம் எது என்றும் தென்னை மரங்களை தரம் பிரித்து நட்டார்கள்.

தென்னை மரங்களில் வியாதிகளை தாங்கும் ரகம், தேங்காய் குலைகளை தாங்கும் மரம், ஒடிமட்டை மரம் என்று அதிலும் பிரித்து தரம் அறிந்து நட தொடங்கினார்கள்.

சொந்த தோப்பில் விதை எடுத்து தேர்வு செய்யும்போது நல்ல தாய் மரங்களை தேர்வு செய்யும் முறை தமிழ்நாட்டில் பரவலாக உள்ளது. திடகாத்திரமான தென்னை, அதிக மட்டைகள் உள்ள மரம், அதிக குலைகள் உள்ளது, குலை பிடிப்பு அதிகம் உள்ள தென்னை, வியாதி தாக்காத தென்னை மரங்களின் தேங்காய்களை நன்கு முத்தவிட்டு நெத்து இறக்கி முளைக்க வைத்து பயிரிடும் தென்னை விவசாயிகள் தமிழகத்தில் குமரி, தஞ்சை, கோவை மாவட்டங்களில் அதிகம் பார்க்க முடிகிறது.

**<u>கெடுதல் இல்லாத கொழுப்பு</u>**

தென்னம்பிள்ளை தேர்வு செய்வதில் அடிதடித்த திடகாத்திரமானவற்றை தேர்வு செய்து நடும் பழக்கம் உள்ளது. இந்தியாவில் தென்னை மரங்களின் பயன்பாட்டை முதலில் கண்டறிந்தவர்கள் கேரள மக்கள்.

தேங்காயில் கலந்திருக்கும் கொழுப்பு கெடுதல் இல்லாதது என்று கண்டறிந்து தனது அன்றாட உணவு வகைகளில் ஒரு அங்கமாக தேங்காயும், தேங்காய் எண்ணெய் சார்ந்த உணவையும் பயன்படுத்தி வருகின்றனர். சர்வதேச அளவில் 10 வருடங்களுக்கு முன் அமெரிக்காவில் செய்த ஆராய்ச்சியில் சர்க்கரையும், தண்ணீரும் சேரும்போது கரைவது போன்று தேங்காய் எண்ணெய் உள்ள கொழுப்பு ரத்தத்துடன் கரைந்து விடுகிறது என்றும், அதனால் இதயத்திற்கு இதமான உணவு தேங்காய் என்றும் கண்டறிந்து அறிவுறுத்தி உள்ளார்கள்.

**<u>வலம்பிரி தென்னை</u>**

இதை கேரள மக்கள் சுமார் ஆயிரம் வருடங்களுக்கு முன்பே கண்டறிந்து தேங்காயில் குழம்பு, சட்னி, சாம்பார், பொரியல், அவியல் என அனைத்திலும் தேங்காயை சேர்த்து உணவாக்கி வருகின்றனர். தேங்காய் எண்ணையை நல்ல உணவாகவும், மருந்தாகவும் கண்டறிந்து பயன்படுத்துகிறார்கள். உடல் மெருகூட்டவும், கூந்தல் கருப்பாகவும் தைலம் தயாரித்து பயன்படுத்துகின்றனர்.

கேரள சாகுபடியாளர்கள் தென்னை மரங்களில் வலம்பிரி தென்னை, இடம்பிரி தென்னை மரங்களை கண்டறிந்து அடையாளம் காட்டினார்கள். பிரி என்கிற சொல் மலையாளத்தில் சிறிய நூல் (கயிறு) என்று பொருள். உரித்த தேங்காயில் இயற்கையாக தோன்றிய நூல் சுற்றியது போன்று அமைப்பு சிறிய சிறிய கோடுகளுக்கு பிரி என்று அழைத்தார்கள். பிரி என்பது மலையாள கலப்பு சொல் ஆகும்.

தேங்காய் உரித்தவுடன் உற்று கவனித்தால் சிறிய கோடுகள் வலது பக்கமாக நமது கைரேகை போன்று தென்பட்டால் அது வலம்பிரி தென்னை என்றும், கோடு இடது பக்கமாக தென்பட்டால் இடம் பிரி தென்னை என்றும் அடையாளம் காணமுடியும்.

**<u>பூஜை அறைகளில்…</u>**

சங்குகளில் வாய் பகுதி வலது புறமாகவும், பின்பக்க கோடுகள் வலது பக்கமாகவும் சுற்றி வருவதை வலம்பிரி சங்கு என்றும், இடது பக்கமாக வாய் உள்ளதை இடம்பிரி சங்கு என்றும் கூறுவர். வலம்பிரி சங்கு அபூர்வமானது. அது ராசியானது என்று பூஜையறைகளில் வைத்து பாதுகாப்பார்கள். கார்த்திகை சோம வாரத்தின் போது கோவில்களில் சாமி வழிபாடுசெய்வார்கள்.

தென்னை மரங்களில் வலம்பிரி தென்னை அதிக குலைகள் தள்ளும். அதிக மகசூல் தரும் இடம்பிரி தென்னை 30 சதவீதம் குறைவான மகசூல் தருகிறது என்று திருவையாறு தென்னை ஆராய்ச்சி மையம் செய்த ஆராய்ச்சியில் தெரியவந்தது. தொடர்ந்து செய்த ஆராய்ச்சியின் போது தோப்புகளில் உள்ள தென்னை மரங்களில் 10 முதல் 20 சதவீதம் வரை இடம்பிரி தென்னை மரங்கள் மிக குறைவாக உள்ளது. 80 சதவீதத்திற்கு மேல் வலம்பரி தென்னை உள்ளதையும் கண்டறிய முடிந்தது. ஆனால் வலம்பரி, இடம்பிரி தென்னம்பிள்ளை தேர்வு செய்வதில் அதிக முக்கியத்துவம் தரவேண்டியதில்லை.

தென்னம்பிள்ளைகளில் மட்டை பிரித்து வரும்போது உன்னிப்பாக கவனித்தால் தென்னம்பிள்ளை நடுமுன் கூட இடம் பிரி தென்னம்பிள்ளையை பிரிக்க முடியும். அடிபகுதியில் தென்படும் இலை ஏற்ற இறக்கத்தை வைத்து வலம்பரி, இடம்பிரி அடையாளம் காணமுடியும்.

**அதிக மகசூல்**

திருவையாறு தென்னை ஆராய்ச்சி மையம் தயாரிக்கும் திருவையாறு–2 ரக தென்னம் பிள்ளைகளில் இடம்பிரி தென்னம் பிள்ளைகளை பிள்ளையிலேயே பிரித்து எடுத்த பிறகுதான் விவசாயிகளுக்கு வழங்கப்படுகிறது. அதனால் தென்னை வளர்ப்பவர்கள் அதிக மகசூல் பெற்று மகிழ்ச்சியாக இருப்பார்கள்.

தென்னை மரங்களின் தடி பகுதியில் தென்படும் மட்டைகள் ஒட்டியிருந்த தழும்புகளை பார்த்ததும் இடம்பிரி, வலம்பிரி தென்னை அடையாளம் காணமுடியும். ஆனால் வலம்பிரி தென்னையில் வலம்பிரி தேங்காய் தான் காய்க்கும் என்பது கட்டாயம் இல்லை. அதில் முளைக்கும் தென்னம் பிள்ளைக்கும் 100 சதவீதம் வலம்பிரி தென்னைதான் வரும் என்பதற்கு உத்தரவாதமும் இல்லை.

வலம்பிரி தென்னை மரங்களில் பூ (பாளை) மட்டையின் இடதுபுறமாக வளர்ந்து வரும் எண்ணிக்கையில் அதிகம் வரும். வருடம் 18 மட்டை, 18 பாளை (பூ) வந்து 18 குலை தேங்காய் அறுவடையாகும். 45 நாட்களுக்கு 2 குலை தேங்காய் வலம்பிரி தென்னை மரங்களில் அறுவடையாகும்.

மேற்கண்ட தகவல்களை திருவையாறு தென்னை ஆராய்ச்சியாளர் வா.செ.செல்வம் தெரிவித்துள்ளார்.

**செந்துறை அருகே விவசாயிகளுக்கு பயிற்சி முகாம்**



செந்துறை,

திண்டுக்கல் மாவட்டம் நத்தம் வட்டம் குடகிப்பட்டி ஊராட்சிக்குட்பட்ட மணக்காட்டூரில் வேளாண்மைத்துறை சார்பில் பயறு விதை கிராமத் திட்டத்தில் விவசாயிகளுக்கான பயிற்சி முகாம் நடந்தது. முகாமுக்கு ஊராட்சி மன்றத்தலைவர் செல்லம் தலைமை தாங்கினார். முகாமில் விவசாயிகளுக்கு பயறு உற்பத்தியில் கூடுதல் சாகுபடி தொழில்நுட்பங்கள் மற்றும் துவரை சாகுபடியில் ஏக்கருக்கு 500 கிலோ மகசூல் பெற நாற்றுவிட்டு நடவு செய்யும் முறை குறித்தும் வேளாண்மை உதவி இயக்குனர் ரவிபாரதி பயற்சியளித்தார். முகாமில் விதைச்சான்று அலுவலர் திருமலைச்சாமி, உதவி விதை அலுவலர் பாலமுருகன், வேளாண்மை அலுவலர் நாகேந்திரன், துணை வேளாண்மை அலுவலர் சுந்தர், உதவி வேளாண்மை அலுவலர் சந்திரசேகர் உள்பட பலர் பயிற்சி அளித்தனர். முகாமில் 100–க்கும் மேற்பட்ட விவசாயிகள் கலந்து கொண்டனர்.

**வேலூரில் ஆடு வளர்ப்பு பயிற்சி**



வேலூர்,

வேலூர் கலெக்டர் அலுவலக வளாகத்தில் செயல்படும் கால்நடை மருத்துவ பல்கலைக்கழக பயிற்சி மற்றும் ஆராய்ச்சி மையத்தில், ஆடு வளர்ப்பு தொடர்பாக ஒரு நாள் இலவச பயிற்சி முகாம் நாளை (வியாழக்கிழமை) நடக்கிறது. பயிற்சியில் ஆர்வம் உள்ள பண்ணையாளர்கள், தொழில் முனைவோர் மற்றும் சுய உதவிக்குழு உறுப்பினர்கள் கலந்து கொள்ளலாம்.

முன்னதாக அவர்கள் தங்கள் பெயர்களை மேற்கண்ட விலாசத்தில் பதிவு செய்து கொள்ள வேண்டும் என கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளனர்.

**திருவள்ளூரில் விவசாயிகள் குறைதீர்க்கும் நாள் கூட்டம்**



திருவள்ளூர்,

திருவள்ளூரில் கலெக்டர் அலுவலக வளாகத்தில் நாளை மறுநாள் (வெள்ளிக்கிழமை) கலெக்டர் வீரராகவராவ் தலைமையில் மாவட்ட விவசாயிகள் குறைதீர்க்கும் நாள் கூட்டம் நடைபெற உள்ளது. இந்த கூட்டத்தில் திருவள்ளூர் மாவட்டத்தில் உள்ள வேளாண்மைத்துறை, தோட்டக்கலைத்துறை, வருவாய்த்துறை, மின்சார வாரியம், கூட்டுறவுத்துறை, பொதுப்பணித்துறை, வேளாண்மை பொறியியல்துறை, மீன்வளத்துறை, கால்நடைத்துறை., வேளாண் விற்பனைத்துறை மற்றும் இதர வேளாண்சார்ந்த துறை அலுவலர்கள் கலந்து கொண்டு விவசாயிகள் குறைகளுக்கு தீர்வு காண உள்ளனர்.

எனவே திருவள்ளூர் மாவட்டத்தை சேர்ந்த விவசாயிகள் இந்த கூட்டத்தில் கலந்து கொண்டு பயன்பெறுமாறு கலெக்டர் கொ.வீரராகவராவ் கேட்டு கொண்டுள்ளார்.

**கரூர் மாவட்டத்தில் 800 பண்ணை குட்டைகள் அமைக்க இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது**



கரூர் மாவட்டத்தில் 800 பண்ணை குட்டைகள் அமைக்க இலக்கு நிர் ணயிக்கப்பட்டு உள்ளது என்று கலெக்டர் ஜெயந்தி கூறினார்.

பண்ணை குட்டைகள்

கரூர் மாவட்டத்தில் மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதி திட்டத்தில் பண்ணை குட்டைகள் அமைக்கப்பட்டு வருகிறது. இவற்றை கலெக்டர் ஜெயந்தி நேரில் சென்று ஆய்வு செய் தார்.

அதே போன்று பசுமை போர்வை என்ற திட்டத்தின் கீழ் அரசு புறம்போக்கு நிலங் களில் மரக்கன்றுகள் நடுவதற் கான பணிகள் நடைபெற்று வருகிறது. இவற்றையும் நேரில் சென்று ஆய்வு செய்தார்.

பேட்டி

அதன் பிறகு அவர் நிருபர்களுக்கு பேட்டியளித் தார்.

அப்போது அவர் கூறிய தாவது:-

மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதி திட்டத்தில் பணிபுரியும் பயனாளிகளை வைத்து விவசாய நிலங்களில் இலவச மாக பண்ணை குட்டைகள்

அமைக்கப்பட்டு வருகிறது. அதன்படி சிறு, குறு விவசாயிகள் 2 ஏக்கர் வரை நிலம் வைத்து இருந்தால் பண்ணை குட்டை அமைக்க அனுமதி வழங்கப்படுகிறது.

இதில் தாழ்த்தப்பட்டவர்கள் மற்றும் பழங்குடியினருக்கு நில உச்ச வரம்பு இல்லை. ஒரு பண்ணை குட்டை அமைக்க ரூ.72 ஆயிரம் முதல் ரூ.1½ லட்சம் வரை அரசு செலவு செய்யப்படுகிறது.

இந்த பண்ணை குட்டைகள் அமைக்கப்படுவதன் மூலம் அருகில் உள்ள குளம், குட்டைகள், கிணறுகளில் நீர் மட்டம் உயர்ந்து, வறட்சி காலங்களில் பயன்படுத்தப் படும். அதே போன்று இந்த பண்ணை குட்டைகளில் விவசாயிகள் மீன் வளர்க்க லாம். அதற்கான மீன் குஞ்சுகள் மீன் வளத்துறை மூலம் பெற நடவடிக்கை எடுக்கப்படுகிறது.

அதன்படி கரூர் மாவட்டத்தில் 800 பண்ணை குட்டைகள் அமைத்து மீன் வளர்க்க இலக்கீடு செய்யப் பட்டு உள்ளது. மேலும் 1,000 பண்ணை குட்டைகள் அமைக்க உத்தேசிக்கப்பட்டு உள்ளது.  இவ்வாறு அவர் கூறினார்.